# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 18/04/2018 | முதல் | 22/04/2018 |
| அறிக்கை எண் : | 030/ 2018 | வெளியீட்டு நாள் : | 17/04/2018 | | |

| கடந்த கால வானிலை 13/04/2018 முதல் 16/04/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 6.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 36-38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26-27 |
| மேக மூட்டம் | 5-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 37-88 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 0-22 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 22-04-2017 8.30 மணி வரை )

| காரணிகள் | 18-04-2018 | 19-04-2018 | 20-04-2018 | 21-04-2018 | 22-04-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 0 | 0 | 1 | 1 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 38 | 38 | 39 | 39 | 39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27 | 27 | 28 | 28 | 28 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 75 | 75 | 75 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 40 | 40 | 45 | 45 | 45 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி :**
வரும் 20 மற்றும் 21ம் தேதிகளில் ஒருசில இடங்களில் மிக லேசான மழை பெய்ய வாய்ப்பு. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 12 கி.மீ வேகத்தில் தென்கிழக்கு திசையில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி & ( கால்நடை)**

தற்போது நிலவும் வெப்பநிலையின் காரணமாக தாக்காளியில் பாக்டீரியா வாடல் நோயனது பரவலாக தென்படுகின்றது. இந்நோயானது வளரும் தாவரங்களை விரைவாக மற்றும் முழுமையாக வாடச் செய்யும். வாடுவதற்கு முன்பே செடியின் கீழ் இலைகள் உதிர்ந்துவிடும். தண்டு நாளங்களை ஆக்கிரமித்து, திசுக்களை மஞ்சள் பழுப்பு நிறமாக நிறமாற்றமடையச் செய்கின்றன. இதன் தாக்குதலை கட்டுப்படுத்த நாற்று நடும்பொழுது நாற்றிற்கு சேதம் ஏற்படாமல் நட வேண்டும். ஒரு ஹெக்டருக்கு 10 கிலோ பிளீச்சிங் தூளை இடலாம் மேலும் தட்டைப்பயறு - மக்காச்சோளம் – முட்டைக்கோஸ், வெண்டை – தட்டைப்பயறு – மக்காச்சோளம், மக்காச்சோளம் – தட்டைப்பயறு மற்றும் கேழ்வரகு – கத்தரி போன்றவற்றை பயிர் சுழற்சிமுறையினை பின்பற்றி பயிரிடுவதன் மூலம் தக்காளியில் பாக்டீரியா வாடல் நோயைக் குறைக்கலாம்.

பகல் நேர வெப்பநிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை நான்கு தவணைகளாக பகிர்ந்து கொடுக்கவும்.